# பொலநறுவையில் 149 தமிழ் இளைஞர் பொலிசாரால் சுற்றிவளைப்பு

விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 3 இதழ் 228
யாழ்ப்பாணம் புதன்கிழமை 20 - 09 - 1995

(பொலநறுவ)
பொலநறுவ மாவட்டத்தில் உள்ள ஒரு பிரதேசத்தில் பொலிசார் சுற்றி வளைத்து 149 தமிழ் இளைஞர்களை விடுதலைப்புலி சந்தேக நபர்கள் என கூறி தடுத்து காவலில் வைத்துள்ளனர்.

பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் இரகசிய பணியில் இவர்கள் ஈடுபட்டிருந்ததாக பொலிசார் கூறியதாக தெரிவிக்கப்பட்டது.

கே-வி

## ஏறுவூரில் புலிகள் அதிரடி பொலிஸாரில் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)
மட்டு. ஏறுவூரில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில் பொலிஸாரில் ஒருவர் பலியானார் ஒருவர் காயமடைந்தார்.

மட்டு. ஏறுவூர் பொலிஸ் பிரதேசத்தில் வீதித்தடைகளுக்கு அருகில் இருந்த பொலி

(6ம் பக்கம் பார்க்க)

## 24 உதவி பொலிஸ் அதிபர்கள் திடீர் இடமாற்றம்

(கொழும்பு)
24 உதவிப் பொலிஸ் மாஅதிபர்கள் ஒக்டோபர் 1ம் திகதியிலிருந்து வேறு இடங்களுக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் திணைக்களத்தை

(6ம் பக்கம் பார்க்க)

# ★ வடபகுதி மீதான பாரிய தாக்குதலை நடத்துவதில் அரசு தரப்பில் தளம்பல் நிலை

[கொழும்பு]
விடுதலைப்புலிகளின் முனைப்பான தாக்குதல் மற்றும் பல காரணங்களினால் அரசுதரப்பில் வடபகுதி மீதான பாரிய ராணுவ தாக்குதலை மேற்கொள்வதில் தளம்பல் நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்தக் குழந்தை என்ன குற்றம் செய்தது?



இலங்கையில் ஆங்கிலேயர்களின் ஆட்சி அகலும் தறுவாயில் ஈழத்தமிழர் பாதுகாப்புடனும் சுயகௌரவத்துடனும் வாழ வழி செய்வதற்கு தகுதியுள்ள அரசியல் தலைமை தமிழர் மத்தியில் இல்லாது சிங்களவர்கள் விரித்த சூழ்ச்சி வலையில் சோல்பரி அரசியல் அமைப்பில் தமிழரை சிக்க வைத்த தமிழ் தலைமைகளின் விளைவா இது?

இந்தக் குழந்தையின் எதிர்காலத்துக்கு யார் வகை சொல்லப் போகிறார்கள்?

துப்பாக்கி வேட்டால் தந்தையை இழந்தேன், தாரத்தை இழந்தேன். நான் ஒரு விதவை, என் பிள்ளைகள் வன்செயலால் தந்தையை இழந்தவர்கள். யுத்தத்தின் விளைவாக கணவன், பிள்ளைகள், தந்தையர்களை இழந்த ஏனைய சிங்கள மக்கள் போல் நானும் ஒருத்தி என்றெல்லாம் வாக்குச் சேர்த்த ஜனாதிபதியாகிய சந்திரிகா இந்தப் பிள்ளையின் எதிர்காலத்துக்கு வகை சொல்லுவாரா?

மட்டுப்படுத்தப்பட்ட போர் கூட நடைபெறாத ஓர் இடத்தில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த இரவுவேளையில் நாசகார எறிகணையைச் செலுத்திய சிங்கள இராணுவத்தினர் ஏன் இந்தப் பிள்ளையின் எதிர்காலத்துக்கு வகை சொல்லவேண்டும்!

தமிழ் மக்களாகிய நாம் தான் மாவீரரைப் போற்றி விழுப்புண் அடைந்த போராளிகளைப் பேணிப் பாதுகாத்து வருவது போல் இப்பிள்ளையும் அவரைப் போன்றவர்களும் தாம் தமிழிச்சியாகப் பிறந்ததாலேயே தங்களுக்கு இந்தக்கெதி என்று எண்ணி மனங் கலங்காது தீரமிகு பிரஜைகளாக வளர்வதற்கு வழிவகுக்கவேண்டும்.

வடமராட்சி வல்வெட்டி பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு நேரம் நித்திரையில் இருந்தபோது இராணுவத்தின் ஷெல் வீச்சுக்கிலக்காகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை சுந்தரம் சின்னராசா (வயது 50), தாய் மனோரஞ்சிதம் (வயது 45), தர்ஷனி (வயது 02), தரணியா (வயது 6) ஆகியோர் படுகாயமடைந்தனர். இதில் தாயினதும் மகள் சர்ஷினியினதும் கால்கள் துண்டிக்கப்பட்டன

## பிரதமர் பதவி விரைவில் மாற்றப்படலாம்

(கொழும்பு)
பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் சுகயீனம் காரணமாக பிரதம மந்திரி பதவிக்கு வேறு ஒருவர் நியமிக்கப்படலாம் என்று 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தப்பதவிக்கு தற்போதைய அமைச்சர்களான தர்மசிறி சேனநாயக்கா அல்லது ரத்னசிறி விக்கிரமநாயக்காவின் பெயர்கள் அடிபடுகின்றது.

பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா நோயின் காரணமாக ஓய்வு பெறுமாறு டாக்டர்கள் அறிவுறுத்தியதைத் தொடர்ந்தே இந்த மாற்றம் நிகழ்கின்றனவாம்.

இதேவேளை மேலும் பல அமைச்சுக்களில் சில சில மாற்றங்கள் நிகழலாம் என 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ம-ரி

## காங்கேசன் துறைமுகம் மீது புலிகள் இலக்கு

(கொழும்பு)
காங்கேசன்துறை துறைமுகத்தை புலிகள் இலக்கு வைத்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

துறைமுகத்தையும் அங்கு தரித்து நிற்கும் பாரிய கப்பல்களையும் தகர்ப்பதன் மூலம் யாழ் குடா மீதான தாக்குதலை நிறுத்த புலிகள்

(6ம் பக்கம் பார்க்க)

## யுத்தம் அரசியல் தீர்வுக்கு வழி வகுக்கமாட்டாது

(கொழும்பு)
வட பகுதி கடலில் விடுதலைப் புலிகளின் கடலாதிக்கம் அதிகரித்துள்ளதால் அரசு எதிர்காலத்தில் பணத்தை விரயம் செய்து யுத்தத்தை தொடருவது எவ்வகையிலும் ஆரோக்கியமான அரசியல் தீர்வுக்கு வழிவகுக்காது என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஆட்சியிலிருப்போர் வெறுமனே தமது அதிகார பதவியைக் கட்டிக் காக்கும் வகையில் போரை தொடருகின்றனரே தவிர நாட்டு நலனைக் கருத்திற்கொண்டு போரை

(6ம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவு நிகழ்வுகளில் மக்கள் அதிகளவில் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)
தியாகி லெப். கேணல் திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு நாளின் ஐந்தாவது நாளாக நேற்று குடாநாடு பூராவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கோட்ட ரீதியாக நடைபெற்றுவரும் தியாகி திலீபனின் நினைவுநாள் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளில் கல்லூரி மாணவர்கள் பொது மக்கள் ஆண், பெண் என்ற

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா, மூட்டுவாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள். மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப் படுத்துவார் வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி 1667)

### நேர்முகப் பரீட்சை

சுருக்கெழுத்தாளர் பயிற்சியை தமிழ் மொழி மூலம் பெற விண்ணப்பித்தவர்கள் 25-09-95 திங்கள் காலை 9-00 மணிக்கும், ஆங்கில மொழி மூலம் பெற விண்ணப்பித்தவர்கள் காலை 11-00 மணிக்கும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரும்படி வேண்டப்படுகின்றீர்கள். செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி, கரவெட்டி. (சி- 1676)

### SPOKEN ENGLISH
### ஆங்கிலக் கல்வி நிலையம்

விரைவாகவும், சுலபமாகவும் ஆங்கிலம் பேசப் பயில. ஆசிரியர்: ந. விக்னேஸ்வரன், இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். சி- 1675

### பலவித பொருட்கள்

சகலவிதமான துவிச்சக்கர வண்டிகளும், உதிரிப்பாகங்களும், சிற்றிசன், சீக்கோ, கஷியோ கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள், சுடுதண்ணீர்ப்போத்தல், சகலவிதமானரோச்லைற், விளையாட்டுப் பொருட்கள் (Sport Goods) சகாய விலையில் பெற்றுக்கொள்ள: புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்), 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5244)

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழிக்கான அடைமுட்டைகளும், மற்றும் நல்லினக் கோழி அடை முட்டைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- மருதம் கோழிப்பண்ணை. பலாலி வீதி, திருநெல்வேலி. (ஏ-5317)

# தியாகி திலீபன் நினைவாக இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 8ம் ஆண்டு நினைவாக யாழ் மாவட்ட ரீதியில் இன்று 20ம் திகதி நடைபெறும் உண்ணாவிரதங்கள் பற்றிய விபரங்கள்

வலிகாமம் கோப்பாய் வட்டம்: அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம்' அச்சுவேலி தெ. ப. பொ. கூ. சங்கம், புத்தூர் ச.ச நிலையங்கள் புத்தூர் உற்பத்திக்குழுக்கள், ஆவரங்கால் ச.ச நிலையம். ஆவரங்கால் உற்பத்திக் குழுக்கள், ஆவரங்கால் முரளி தையல் பயிற்சி நிலையம், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம். புத்தூர் மாதர் சங்கங்கள். வாதரவத்தை வித்தியாலயம்;

வலிகாமம் [உடுவில் வட்டம்] சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம், உடுவில் சிற்றூர் மக்கள், உடுவில் சிற்றூர் இடம்பெயர்ந்த மக்கள். ரேட்ட நிக்கழகம்

தீவகக் கோட்டம்] நல்லூர்] மூஸ்லிம் பகுதி மக்கள், அம்பாள் விளையாட்டுக்கழகம் புங்குடுதீவு

தென்மராட்சி [கைதடி] யாழ் கைதடி குருசாமி வித்தியாசாலை கைதடி வடக்கு ச.ச நிலையம், கைதடி வடக்கு செல்வா ச ச நிலையம்

[சாவகச்சேரி] சரசாலை வடக்கு சரசாலை தெற்கு மக்கள் சிகை அலங்கரிப்பாளர்கள் சலவைத்தொழிலாளர்கள்

[கொடிகாமம்] சிகை அலங்கரிப்பாளர் சங்கம். சலவைத் தொழிலாளர் சங்கம்

[பளை] தம்பகாமம் சிற்றூர் மக்கள், கடற்றொழிலாளர் சங்கம்.

வடமராட்சி [உடுப்பிட்டி] மாவீரர்படிப்பகம். நித்தி நியூட்டன் ஸ்ரீ சுப்பாஸ் ச. ச நிலைய உறுப்பினர்கள் மக்கள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி' (கரவெட்டி) வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்க உறுப்பினர்கள் மக்கள்;

தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு கோட்ட மட்டத்தில் மாணவர் அமைப்பினால் பருத்தித்துறையில் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரதம் நிகழ்வுகளில் இன்றைய தினம் புடடளை மகாவித்தியாலயம், வேலாயுதம் மகாவித்தியாலயம் மாணவர்கள் கலந்து கொள்வர்,

கடற்புலிகளின் யாழ் மாவட்ட பிரதேசங்களின் வட்ட ரீதியாக நாகர்கோவிலில் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரத நிகழ்வில் இன்றையதினம் ராஜன் நகர் மக்கள் கலந்துகொள்வர். ர-சி

# தமிழீழப் போரில் ஏழாயிரம் போராளிகள் மாவீரரானார்கள்

(நெல்லியடி)

மக்கள் நிம்மதியாக சுதந்திர காற்றை சுவாசிக்க வேண்டுமென்பதற்காக இதுவரை தமிழீழ போராட்டத்தில் 7000 க்கு மேற்பட்ட போராளிகள் மாவீரரானார்கள்

இவ்வாறு திருமலையில் நிலாவெளிப் பகுதியில் அமைந்த ஸ்ரீலங்கா பொலிஸ் நிலையத்தை அதிரடித்தாக்குதல் மூலம் முற்றாக அழித்து வீரகாவியம்படைத்த மாவீரர் மூவரது திருவுருவப்படங்களும் நெல்லியடி பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டு இறுதி வீர வணக்கக்கூட்டம் நடைபெற்ற போது பேசிய தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படை அணியைச் சேர்ந்த செல்வி. சுகுணா குறிப்பிட்டார்.

பருத்தித்துறை வட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. து. தமிழரசன் தலைமையில் இக்கூட்டம் ஆரம்பமானது.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஆண்டாண்டு காலமாக அடிமையாக இருந்த இனம் அடிமை நிலையிலிருந்து விடுபட தேசியவிடுதலையை விரைவில் வென்றெடுக்க மக்கள் அனைவரும் போராட்டத்தில் ஒன்று திரள வேண்டும். எந்த ஒரு நாட்டிலும் விடுதலைப் போராட்டத்திற்கு கிடைக்காத தலைவர் எமக்குக் கிடைத்துள்ளார்; எனவே அவர்

(5ம் பக்கம் பார்க்க)

## பொருளியற் கல்லூரி

110/1, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

[ மக்கள் வங்கிக்கு அருகாமை ]

### A/L 97 வர்த்தகப் பிரிவு

| பாடம் | ஆசிரியர் | நேரம் |
|---|---|---|
| கணக்கியல் | திரு. சௌந்தி | 8.00 – 9.00 |
| வர்த்தகம் | திரு. வரதன் | 9.00 – 10.00 |
| பொருளியல் | திரு. வரதராஜன் | 10.00 – 11.00 |
| வணிகப் புள்ளி விபரவியல் | திரு. தவசேகர் | 11.00 – 12.00 |

### A/L 97 கலைப்பிரிவு

| பாடம் | ஆசிரியர் | நேரம் |
|---|---|---|
| தமிழ் | திருமதி மீரா | 7.00 – 8.00 |
| இந்து நாகரீகம் | திரு. காரை கெங்கா | 8.00 – 9.00 |
| அளவையியல் | திரு. சர்மா | 9.00 – 10.00 |
| பொருளியல் | திரு. வரதராஜன் | 10.00 – 11.00 |
| புவியியல் | திரு. சண் | 11.00 – 12.00 |
| கிறிஸ்தவம் | திரு. நிரஞ்சன் | 8.00 – 9.00 |

ஆரம்பம்: 24-09-95 ஞாயிறு

(ஏ-5312)

# 8000 ஆசிரியர்கள் விரைவில் தெரிவு

[கொழும்பு]

ஆசிரியர் சேவைக்கு 8000 பேரும் லிகிதர் சேவைக்கு 3000 பேரும் ஏனைய அரச வெற்றிடங்களுக்கு 5000 பேரும் விரைவில் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை விரைவில் நடாத்தப்படும் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அவர் அதுபற்றி மேலும் தெரிவிக்கையில் போட்டிப் பரீட்சை மூலம் வேலைவாய்ப்பு வழங்கும் முறை ஒளிக்கப்பட்டுவிட்டது என்று எதிர்க்கட்சியினர் கூறுவதில் எதுவித உண்மையுமில்லை. ஆசிரியர் லிகிதர் மற்றும் ஏனைய அரச வெற்றிடங்களுக்கு போட்டிப் பரீட்சை மூலமே ஆட்கள் தெரிவுசெய்யப்பட்டு வேலைக்கு அமர்த்தப்படுவர்.

ஆனால் தொழிலாளர்கள் மற்றும் இதுபோன்ற ஏனைய வெற்றிடங்களுக்கு போட்டிப் பரீட்சை நடாத்தப்படமாட்டாது; லிகிதர் வெற்றிடங்களுக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். ர.சி

# ★ தமிழீழத்தில் ராணுவ அட்டூழியங்கள் சீன மாநாட்டில் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் நடைபெற்று வரும் அரசவன்முறைகள், மனிதப் படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும்; நாட்டில் சமாதானம், சகவாழ்வு நிலவுவதற்கான வழிமுறைகள் காணப்படவேண்டுமென சீனாவில் நடைபெற்ற 'அனைத்து உலகப் பெண்கள் மாநாட்டில்' எடுத்துக் கூறப்பட்டுள்ளது

இம்மாநாட்டுக்குச் சென்று நாடுதிரும்பிய யாழ்;மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் இயக்குனர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் இதனை தெரிவித்தார்;

இருகட்டமாக நடைபெற்ற இம்மாநாட்டின் ஒரு கட்ட மாநாடு குவைரோ நகரில் நடைபெற்றது. இதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமிழீழத்தில் நடைபெற்றுவரும் மனிதப் படுகொலைகள், வட-கிழக்கு மீதான பொருளாதாரத் தடை, மற்றும் இங்கு நடைபெற்றுவரும் அரச படையினரின் அட்டூழியங்கள் பற்றி இம்மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டதெனவும் தெரிவித்தார்; 162-சி

## விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்ருஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும், வீடியோ கமரா, ரீ. வி. டெக் றேடியோக்கள் மணிக்கூடுகள் திருத்துவதற்கும்

வீனஸ், டில்கா வாச் & றேடியோ வேக்ஸ்
284. ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி
Our Qualified Experienced Technical & Tutorial Staff

T. THANABALASINGAM B. Sc [Ceylon]
Dip-in Electronic Engineering [Lond]
[Specialist in V. C. R Service] [A 5316]

**மணிவாக்கு**

திக்கற்றவர், ஏழை எளியவர், கல்வி அறிவு இல்லாத விவசாயிகள், தொழிலாளர் ஆகியோருக்குச் சேவை செய்வதே நமது வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகும். — சுவாமி விவேகானந்தர்.

# நமது நோக்கு

## ரத்வத்தையும் யுத்தமும்

இராணுவத் தீர்வு மூலம் பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து இல்லாதொழித்து விட்டு பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்காத தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்க வேண்டும் என்று அநுருத்த ரத்வத்தை கண்டியில் நடந்த மகாநாடொன்றில் கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் பேசுகையில்; நாட்டுமக்களுக்குள் பெரும்பாலானோர் சமரசத் தீர்வின் மூலமே நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் உருவாக்கப்பட வேண்டுமென்பதில் திடமாக உள்ளனர் என்றும் கூறியுள்ளார். அத்தகையவர்களின் விருப்பம் யுத்தத்தினால் நிறைவேற்றப்பட முடியாதுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரத்வத்தையின் பேச்சை எடுத்துக் கொண்டால் சந்திரிகா அரசு தற்போது முன் வைத்த தீர்வு யோசனைகள் ஒரு முற்று முழுதான நாட்டின் பிரச்னைகளை தீர்த்து வைக்கக் கூடியதாக அமையவில்லை என்பது போல் தெரிகிறது. பொதுசன ஐக்கிய முன்னணி அமைச்சர்கள், நாடாளுமன்ற அங்கத்தவர்கள் மத்தியிலும் சந்திரிகாவின் தீர்வு யோசனைகளுக்கு எதிர்ப்பு உள்ளது என்பதை ரத்வத்தையின் பேச்சு எடுத்துக் காட்டுகிறது. யுத்தத்தில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்த பின்னர் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க முடியாதவகையில் தீர்வுத் திட்டம் கொண்டுவரப்பட வேண்டுமானால் விடுதலைப் புலிகளை முதலில் ஒழிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளை சிறிலங்கா அரசு தோற்கடிக்குமா? முப்பதினாயிரம் படையினர் பலாலிக்கு கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மீது பாரிய தாக்குதலை நடத்த எல்லாவித ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால் கடைசிநேரத்தில் படையினர் ஒரு கோரிக்கையை விடுத்துள்ளனர். விடுதலைப் புலிகளின் பீரங்கிப்பலம் மற்றும் கடற்படைபலம் ஆகியவற்றை கண்டறிந்து தாக்குதல் நடத்துவதற்கு வசதியாக ''ராடர்'' கருவிகளை தமக்குத் தந்துதவுமாறு படையினர் அரசுக்கு அவசர கோரிக்கையை விடுத்துள்ளனர். இதற்காக அரசு இராணுவக் குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி 'ராடர்' கருவிகளை விலைக்குப் பெறவேண்டும் இது ஒரு வேடிக்கையான கோரிக்கை. ஒருவர் குற்றம் செய்துள்ளார். தலைமறைவாக இருக்கிறார் என்று பொலிசில் முறைப்பாடு செய்தால் ஆளைக்காட்டு பிடிக்கிறேன் என்று பொலிஸ்காரர் கூறுவது போன்ற நிலை.

ரத்வத்தை தனது பேச்சில் நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் சமரசத் தீர்வின் மூலமே சமாதானமும் சுபீட்சமும் உருவாக வேண்டுமென்று விரும்புகின்றனர், ஆனால் யுத்தம் காரணமாக அத்தகையோரின் விருப்பம் நிறைவேற்றப்பட முடியாதிருக்கிறது என்று கூறியுள்ளார். பெரும்பான்மை மக்களின் விருப்பப்படி நடப்பதற்கு சுலபமான வழி ஒன்றிருக்கிறது. அதுதான் யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு சமரசத் தீர்வொன்றை உண்டாக்குவதாகும். யுத்தம் தடையாக இருக்கிறது என்று கூறுவது விதண்டாவாதம். சமரசத் தீர்வுகாண விரும்பினால் யுத்தத்தை நிறுத்த வேண்டும். இவ்விதம் பேசிக்கொண்டு யுத்தத்தை மேலும் முன்னெடுப்பதற்காக 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு கட்டாய இராணுவ பயிற்சி கொடுக்கப்போகுதாம் அரசு. ஒன்றுக்கொன்று முரணான பேச்சும் செயலும்.

அரசு அல்லது ரத்வத்தை யுத்தத்தை நிறுத்துவார்களென்று எதிர்பார்ப்பது வீண் ஆசை. போர் வெறி கொண்ட சந்திரிகாவும், ரத்வத்தையும் போரை மேலும் முன்னெடுப்பார்கள். தமிழர்களின் அடிப்படை உரிமைகளைத்தானும் ஏற்கமாட்டாத இவர்களின் இனிப்பு முலாம் பூசிய நச்சுப் பேச்சுக்கள் ஏமாளிப் பொதுமக்களை ஏமாற்றுவதற்காகவே பேசப்படுகிறது. அமைச்சர் பீரிஸ் அண்மையில் கூட்டமொன்றில் பேசும்போது தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை அரசு ஏற்கவுமில்லை. அக் கோட்பாட்டின் அடிப்படையில் காணி உரிமைகள் வழங்கப்படவும் இல்லையென்று கூறியுள்ளார். தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை மறுப்பதன் மூலம் அரசு யுத்தத்தை முன்னெடுக்கிறது.

தமிழர்கள் அருகருகே ஒருங்கமைந்த வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நீண்ட நெடுங்காலமாக பொதுவான கலை, பண்பாட்டைக் கொண்டு வாழ்ந்து வரும் ஒரு தேசிய இனம் என்றும் அவர்கள் பிரிந்து வாழும் உரிமை உட்பட தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கும் சுய நிர்ணய உரிமையுடையவர்கள் என்றும் ஏற்றுக் கொள்ளப்படும் வரை விடுதலைப் போராட்டம் தொடரத்தான் செய்யப்போகிறது. சந்திரிகாவின் ஆசை வார்த்தையோ, ரத்வத்தையின் போலிப் பேச்சுக்களோ தமிழர்களை ஏமாற்றப்போவதில்லை.

# வெளிநாடுகளிலிருந்து விமானங்களை கடத்திவந்து புலிகள் தாக்கலாம்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்தும் விமானங்களை கடத்தி வந்து கொழும்பு நகரில் புலிகள் குண்டுத் தாக்குதல்களை நடாத்தக்கூடுமென்ற அச்சமும் படை வட்டாரங்களில் எழுந்துள்ளதாம்.

இதையடுத்து கொழும்பில் முக்கிய பகுதிகளில் உள்ள உயர்ந்த கட்டிடங்களில் விமான எதிர்ப்பு பீரங்கிகள் பொருத்தப்பட்டு படையினர் முழுத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் விமான சேவைகளாவும் நிறுத்தப்பட்டதற்கு இதுவே காரணமெனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் பல முக்கிய பகுதிகளில் 'ராடர்' கருவிகளும் பொருத்தப்பட்டு நிலைமைகள் தீவிரமாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# சந்திரிகாவைகொல்லும் திட்டத்துடன்

## அன்ரனேவ் விபத்திற்கு தொடர்புண்டா?

[கொழும்பு]

அன்ரனோவ் விமான விபத்திற்கும் ஜனாதிபதி [சந்திரிகாவை கொலை புலிகள் விமானத் தாக்குதலை நடாத்தலாம் என்ற இரகசிய திட்டத்திற்கும் தொடர்புகள் உண்டா என இரகசிய பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்,

ஜனாதிபதி சந்திரிகாவை விமானம் மூலம் குண்டுத் தாக்குதல் நடாத்தி கொலை செய்வதற்காக புலிகள் பல திட்டங்களை போட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஆங்கிலப் படப்பாணியில் இதனை நிறைவேற்ற அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள் எனவும் டி. ஐ. ஜி கொட்டகதெனியா கூறியுள்ளார்.

இதற்காக புலிகள் இரத்மலானை விமான நிலையத்திற்கு அருகில் வீடொன்றை வாடகைக்கு அமர்த்தியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சி

# அன்ரனேவை கடலுக்கடியில்

## படமெடுக்க வெளிநாட்டு சுழியோடிகள்

(கொழும்பு)

நீருக்கடியில் வீழ்ந்து கிடக்கும் அன்ரனேவ் விமானத்தை நீருக்கடியில் சென்று வீடியோ படம் எடுப்பதற்காக வெளிநாட்டுச் சுழியோடிகள் பலர் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி அமெரிக்கா ஸ்கொட்லாண்ட் நாடுகளைச் சேர்ந்த கடலடிச் சுழியோடுவதில் வல்லவர்களான இருவர் உடனடியாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட வெளிநாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களின் உதவிகளுடன் 'அன்ரனேவ்' விமானத்தைக் கரைக்கு கொண்டு வருவது பற்றியும் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு பல நாடுகளுடனும் அவசரத் தொடர்புகளை தினமும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# மாட்டு வண்டில்களிலும் ஆயுதக் கடத்தலாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை மாட்டு வண்டில்கள் மூலமும் கடத்துவதாக படையினர் கூறுகின்றனர்.

மட்டக்களப்பிற்கும் -யாழ்ப்பாணத்திற்கு மிடையே புலிகள் இந்த ஆயுதக் கடத்தலை பல வழிகளிலும் மேற்கொள்வதாகவும் காடுகளினூடாக மாட்டு வண்டில்கள் மூலம் ஆயுதங்கள் கடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் புலிகள் இராணுவத்தினரின் பாரிய தாக்குதலை எதிர்கொள்வதற்காக இவ்வாறு ஆயுதங்களை வடக்கே கொண்டு போய்ச் சேர்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். சி

# இராசி பலன்

20-09-1995

புதன்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி-3]

ஏகாதசி மு. இ. 9.33வரை: பூசம் நள்இரவு 12.43 வரை சித்தயோகம், இராகு காலம் நண்பகல் 12-02 முதல் 6-13 வரை சுபநேரம் மாலை 4-32 முதல் 6-02 வரை.

மேஷம்: தந்திரப்பேச்சு, குடும்ப கவலை, காரியத்தடை.

இடபம்: விவகாரத்தில் சமாதானம், மனமகிழ்ச்சி பணவரவு.

மிதுனம்: தொழில்லாபம், புத்திரர் சிந்தனை, அலைச்சல்.

கடகம்: கடமைஉணர்வு, நல்லோர் நட்பு, சமயோசித செயல்.

சிங்கம்: குடும்பபரிவு, வீண் கோபம், சகோதரபலம்.

கன்னி: நண்பர் ஆதரவு, புதிய முயற்சி, விருந்தோம்பல்.

துலாம்: அறிஞர் சந்திப்பு, முயற்சி பலிதம் வாதத்திறமை.

விருச்சிகம்: குழப்பமான எண்ணங்கள், வேலைப்பளு, கவிரயம்.

தனுசு: பிடிவாதப்பேச்சு, கிழோர் நட்பு, பணக்கஷ்டம்.

மகரம்: எதிர்பாராதகௌரவம், முக்கிய சந்திப்பு, தான தர்மம்.

கும்பம்: உறவினர் நன்மை கலந்தாலோசனை, தெய்வீக செலவு.

மீனம்: விரோதிகள்பயம், திருப்தியற்ற நிலை. யோசனை,

— ஜோஸ்யர்

# முன்னாள் விமானிகளுக்கு அரசு அவசர அழைப்பு

(கொழும்பு)

அன்ரனோவ் விபத்து குறித்து ஆராய பாதுகாப்பு அமைச்சு முன்னாள் விமானிகள் பலரை அழைத்துள்ளது.

ஒரு விமானம் எந்தெந்த வழிகளில் விபத்துக்குள்ளாகலாம் என்பது பற்றி இவர்களிடம் பாதுகாப்பு அமைச்சு

(5ம் பக்கம் பார்க்க)

## அறப்போரின் தளபதியே திலீபா!

ஊரெழு எமக்கு உவந்தளித்த
உத்தமனே தியாகதீபமே திலீபா!
ஊர் ஏழு மாத்திரமல்ல — இந்தப்
பாரெல்லாம் உன் புகழ் பாடுதையா!

வளர்த்துவிட்ட தாயை
மிதித்துவிட்டுப் போன
மருத்துவ கலாநிதிகள்
நம்மிடையே பலருண்டு
தோளில் நாடிக்குழாய் தொங்க
தொழில் நாடி, சொகுசு நாடி
கொழும்பில் 'சேவை' செய்யும்
பெரியோரையும் எமக்குத் தெரியும்
மருத்துவத்தின் மகத்துவம்
நீ அறியாத தொன்றல்ல
அது எட்டாக் கனியுமல்ல உனக்கு
இருந்தும் —
மருத்துவத்தைவிட மண்ணை நேசித்தாய் நீ!

கத்தியின்றி ரத்தமின்றி சுடுகலனின்றி
யுத்தம் புரிவதே அறப்போராட்டம்!
அதன் பலமிக்க ஆயுதமே உண்ணாநோன்பு
உண்ணா நோன்பில்
நீதானையா மூத்தமகன் இன்று
ஒரு துளிநீர்கூட அருந்தாமல்
உண்ணா நோன்பிருந்த நீ
உலகத் தோரின் கண்ணீருக்கு பாத்திரமானாய்

— கருணைச்சுதன்

# பொது நிகழ்வுகளில் கலந்துகொள்ள பாடசாலை மாணவர்களுக்குத் தடை

[கொழும்பு]

பாடசாலை மாணவர்களை பொது வைபவங்களில் கலந்து கொள்ளச் செய்வதை கல்வி அமைச்சு தடைசெய்துள்ளது.

பல்வேறு வைபவங்களிலும் பிரதம அதிதிகளை வரவேற்பதற்கு பாடசாலை மாணவர்களை பாதையின் இருமருங்கிலும் வரிசையாக நிற்கவைப்பதும், பாடசாலை வளவுக்கு வெளியே 'பாண்டு' வாத்தியக் குழுவைக் கொண்டு செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதுபற்றிய சுற்றுநிருபம் ஒன்றை கல்வி அமைச்சு நாட்டிலுள்ள அனைத்து கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளதுடன் உடனடியாக இதை அமுல்படுத்தும்படியும் கேட்டுள்ளது. வி-ரி

# காணமல் போனோர் பற்றிய முதல்கட்ட விசாரணை பூர்த்தி

(கொழும்பு)

கடத்தப்பட்ட அல்லது காணமல் போனோர் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் முதல் கட்ட விசாரணைகள் முடிவடைந்தன.

பொலநறுவை பகுதியில் இடம் பெற்ற இவ் விசாரணைகள் 1988ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குப்பின் இப் பகுதியில் காணமல் போன 100 பேர்பற்றிய விபரங்கள் இவ் விசாரணைக்குழுவால் ஆராயப்பட்டது.

எதிர்க்கட்சியை சேர்ந்த இளைஞர்கள் மற்றும் குழப்பத்தை விளைவிப்பவர்கள் எனக் கருதப்படுபவர்களும் முன்னைய ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடுமுல்ல கிராமத்தின் 13 பேரின் கொலைக்கு காரணமானவர் எனக் கருதப்படுபவர் பற்றிய விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது.

விசாரணைக்குழுவில் சாட்சியமளித்த விதவை ஒருவர் சம்பவத்திற்கு காரணமானவர்களை கைது செய்து விசாரணைக்கு நிறுத்த வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். க-இ

## குவைத்தில் இலங்கை பெண் கொலை குற்றவாளிக்கு 10வருடசிறை

(லண்டன்)

குவைத்தில் இலங்கைப் பணிப்பெண் ஒருவரை அடித்துக் கொலை செய்த குற்றத்திற்காக, குவைத் பெண் ஒருவருக்கு 10ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பணிப்பெண் வீட்டைத் துப்புரவாக்க மறுத்ததைத் தொடர்ந்து அந்தப் பெண்ணை முதலில் ஒரு இரும்புத்தடியாலும் பின்னர் செருப்பாலும் அடித்ததாக குற்றம் சாட்டப்பட்ட பெண் நீதிமன்றில் கூறினர். -கே.ரி

## மாமூடை திருடியவர் பிடிபட்டார்

(நெல்லியடி)

உணவுக் களஞ்சியம் முன் நிறுத்தி வைக்கப்பட்ட லொறியிலிருந்து மா மூடை திருடியவரை லொறிச் சாரதி மடக்கிப் பிடித்து காவல்துறையில் ஒப்படைத்தார்.

இச் சம்பவம் யாழ்ப்பாணம் குருநகரிலுள்ள உணவுக் களஞ்சியம் முன் நடைபெற்றது. 160

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பனைமரம் தறிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

மக்களின் அத்தியாவசிய பனைமரத் தேவைகளை கருத்திற்கொண்டும் அதேவேளை கண்டபடி பனை தறித்தலை கட்டுப்படுத்தும் முகமாகவும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்து கொண்ட பனை மரக்காலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பனைமரம் தறிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் அனுமதி அளிக்கப்பட்ட மரக்காலைகள் மட்டுமே இப் புதிய நடைமுறையை பின்பற்றலாம் என்றும் வேறெந்த மரக்காலைகளுக்கும் இவ் அனுமதி வழங்கப்படமாட்டாதெனவும் இவ் விதிகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் அறிவித்துள்ளனர். இ

## முழுக்கடனையும் செலுத்துவோருக்கு பத்துவீத தொகை கழிவாக வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் வீடமைப்புக் கடன் பெற்று முற்றாகத் திருப்பிச் செலுத்தியவர்களில் ரத்துச் செய்யப்பட்ட ஈட்டுமுறிகள், ஈட்டுறுதிகள் என்பன தபால் மூலம் உரியவர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரை இவ் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தாம் இறுதியாகப் பணம் செலுத்திய பற்றுச் சீட்டு விபரத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் அலுவலக நாட்களில் நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறுகேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதுவரை இக்கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் அதை இவ்வருட இறுதிக்குள் ஒரே தடவையில் செலுத்துவார்களாயின் அவர்களின் தற்போதுள்ள நிலுவையின் பத்து வீதத்திற்கு சமமான தொகை கழிவாக வழங்கப்படும். இச் சலுகை இவ்வருடம் மார்கழி மாதத்துடன் முடிவடைவதால் வீடமைப்புத் திணைக்களத்திடம் கடன் பெற்று இதுவரை முற்றாக திருப்பிச் செலுத்தாதவர்கள் இச்சலுகையைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். -சி

## பஸ் சேவை

[நெல்லியடி]

வடமராட்சியிலிருந்து வடமராட்சி கிழக்கு உடுத்துறை வரையும் பாடசாலை சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் வடமராட்சி கிழக்கில் பணிபுரியும் பல அரச ஊழியர்களும், ஆசிரியர்களும், அதிபர்களும் பெரும்சிரமமடைகின்றார்கள்.

இச்சேவை சிற்றூர்த்திச் சேவைச் சங்கத்தினால் ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளிவரை நடாத்தப்பட்டு வந்தது தெரிந்தே. 160-சி

## 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை டிசம்பரில் நடைபெறும்

(மானிப்பாய்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு நாடெங்கிலுமிருந்து 3 லட்சத்து 15 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக கணிதம் மொழி அறிவு பொது உளச்சார்பு ஆகிய பாடங்களில் பரீட்சை நடைபெறும்.

இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளின் தொகைக்கு அமைவாக மாவட்ட மட்டத்தில் புலமைப்பரிசில் பெறுவோர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். 71

## நெல் விதைப்பு ஆரம்பம்

[மானிப்பாய்]

அராலி, கல்லுண்டாய், ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதி வயல்களில் நெல் விதைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இப்பகுதியில் கடந்தவாரம் பெய்த பருவ மழையைத் தொடர்ந்து விவசாயிகள் அவசர அவசரமாக குப்பைகளைக் கொட்டி உழுது நெல் விதைப்பதைக் காண முடிகிறது. 71

## தீப்பற்றி எரியும் மோட்டார் என்ஜின்கள்

(சாவகச்சேரி)

கிளாலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளுடன் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பிடித்துக் கொண்டது. வீதியால் சென்றவர்களின் தீவிர முயற்சியால் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டு அணைக்கப்பட்டது.

கடந்த 17-ம் திகதி காலை கிளாலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மூவர் பிரயாணம் செய்த மோட்டார் சைக்கிளின் என்ஜின் பகுதி திடீரென தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. வீதியால் சென்றவர்கள் கூக்குரலிட்டு மறித்துச் சொன்னபொழுது தான் மோட்டார் சைக்கிளில் பயணம்செய்தவர்களுக்கு நிலைமை தெரியவந்தது. உடனடியாகத் தீ அணைக்கப்பட்டு அதில் வந்தவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

அண்மையில் கைதடி பாலத்தடியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பிடித்துக் கொண்டதில் அது முற்றாக எரிந்து நாசமாகியதுடன் அதை ஓட்டிச் சென்றவரும் பலத்த காயத்துக்குள்ளானார்.

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த வாரம் கார் ஒன்றில் பலர் பிரயாணம் செய்து கொண்டிருந்தபொழுது காரின் அடிப்பகுதி திடீரென தீப்பிடித்து எரியத்தொடங்கியது. வீதியால் சென்றவர்கள் இதைக் கண்டு கூச்சலிட்டபோது கார்ச் சாரதி உடன் காரை நிறுத்தி அயலில் நின்றவர்களின் உதவியுடன் தீயை அணைத்தார். -155-சி

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 17- வயதுப் பிரிவில் இன்று புதன்கிழமை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் சென்ஜேம்ஸ் ம.வி எதிர் வைத்தீஸ்வராக் கல்லூரிகள் மோதுகின்றன. வி-சி

## இன்று

(மானிப்பாய்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட் மாவட்ட நிர்வாக பின்னணியில் மாவட்டத் திட்டமிடல் பணிமனைகளின் தோற்றம் வளர்ச்சி, பணிகள் சம்பந்தமான கருத்தரங்கொன்று இன்று புதன்கிழமை பி-ப 2-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

இவ்வைபவத்தில் யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் வி. செ சுவாமிநாதன் கருத்துரை வழங்குவார். 71-சி

## போட்டிகள்

(குருநகர்)

மாணவர்கள், பொதுமக்கள் பங்கேற்கும் கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடாத்த நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பெண்கள் அபிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளது. இப்போட்டி பற்றிய மேலதிக விபரங்களை பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. 95-இ

## வீதிகள் புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகள் சில புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மாநகராட்சி மன்றம் இறசர் கலவை மற்றும் மக்களை கொண்டு வீதிகளில் உள்ள சேதங்களை புனரமைத்து வருகின்றது.

மாநகராட்சி மன்றத்திடம் தார் முற்றாக முடிந்திருப்பதாலேயே மக்கிக் கல்லைக் கொண்டு வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன. 170-சி

## தேசிய அரசு யோசனைக்கு ரணிலும் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு தேசிய அரசு அமைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் திருமதி சிறிமானி அத்துலத்முதலியின் யோசனைக்கு ஐ.தே.க. தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

த. வி. கூட்டணி தலைவர் திரு. சிவசிதம்பரமும் இந்த யோசனையை நிராகரித்துள்ளார். தேசிய அரசு அமைப்பதினால் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். -ரி

## முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் ஏற்படக் கூடியகாயங்களிற்கு உடன் உதவ சிகிச்சை வழங்கும் எளிய முறையினை பயிற்றும் பயிற்சி வகுப்பு 23ம் திகதி சனிக்கிழமையும் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9-00 மணிமுதல் 2-00 மணிவரை பரி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. சி

## கற்றைக் கதிராடுங் காண்!

கப்பல் வருகுதெண்டு
காத்திருந்து காத்திருந்து
உக்கிச் சருகாகி உலருகிறாய்
வெக்கமடா—
உரமான தோளிருக்க
உரமெண்ணெய் என்றிரந்து
திரியாதை சொல்லுறதைக்
கேள்!

ஏறித் துலா மிதிச்சால்
எடபெடியா தோள்வீங்கி
நாம்பன் திமிலாகும் நாளிரண்டில்
பாடுபடு—
பட்டை யிழுத் திறைக்கப்
பலம் பெருகும் கழனியிலே
கற்றைக் கதிராடுங்
காண்!

கூட்டெருவும் குழையெருவும்
கலந்திசைய மண் வசக்கி
பூட்டியஏர் உழுது பயிர் வைமேனை
காட்டிய நீர்—
வாய்க்காலி லோடி வந்து
வேர்க் காலி லே படியச்
சோக்காய்ச் சிரிக்குமடா
சேனை.

— மதவடிச் சித்தர்.

# கடலுக்கடியில் சுழியோடியபோது மகனின் தலையை மீட்ட தந்தை!

(கொழும்பு)

அன்ரனோவ் விமான ஓட்டிகளில் ஒருவரான பிளையிங் ஒபிசர் ஜோன் மாட்டென்ஸ்வரனின் சிதைந்த தலையை அவரது தந்தையும் இலங்கை கடற்படையின் சிறந்த சுழியோடிகளில் ஒருவருமான லெப். கொமாண்டர் செட்றிக் மாட்டென்ஸ்வரன் நடுக்கடலிலிருந்து மீட்டுள்ளார்.

அன்ரனோவ் விமானம் வீழ்ந்து நொருங்கிய தகவலை கேட்டவுடன் திருகோணமலையிலிருந்து தந்தையார் உடனடியாக கொழும்பு சென்றார். மகனே அவ்விமானத்தை ஓட்டியவர்களுள் ஒரு விமானி என அறிந்து கொண்டார்.

மறுநாள் அன்ரனோவைத் தேடி சுழியோடியபோது சிதைந்த நிலையில் தலை ஒன்று இவரால் மீட்கப்பட்டது. இது தனது மகனின் தலையே என இவர் அடையாளம் காட்டினார்.

இதேவேளை தற்போது கடற்பரப்பில் தினமும் சதைத்துண்டங்கள் மிதப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# ஊர்காவல் படைக்கு

## அதிகளவு யுவதிகள் சேர்ப்பு

(வவுனியா)

ஊர்காவல் படைக்கு வவுனியா யுவதிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். சுமார் 50 யுவதிகள் இப்படைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சோதனை தடை முகாம், ரயில் நிலையங்களில் இவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

படைக்குச் சேர்க்கப்பட்ட இப்பெண்களுக்கு ஒரு மாத கால பயிற்சி அளிக்கப்பட்டு 'சொட்கண்' துப்பாக்கியும் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல இளைஞர்கள் ஊர்காவல் படைக்குச் சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. -ர-சி

# பலாலியில் மோட்டார் தாக்குதல்

## சேதம் பற்றி கூற படையினர் மறுப்பு

(கொழும்பு)

பலாலி விமான தளம் மீது விடுதலைப்புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட மோட்டார் தாக்குதலின் சேத விபரம் குறித்த தகவல் எதனையும் படையினர் வெளியிடவில்லை.

இதுபற்றி படையினர் மூடி மறைத்து வருகின்றனர்.

இத்தாக்குதலில் படையினருக்கு அதிகளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

விடுதலைப்புலிகள் பலாலி விமான தளம் மீது இதுவரை நான்கு முறை மோட்டார் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதனை தடுக்கும் நோக்கிலேயே ஒப்பிரேஷன் ஷேக் ஹான்ட் -2 ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை கடற்புலிகள் காங்கேசன்துறை முகத்தில் நடாத்தவிருந்த தற்கொலைப் படைத் தாக்குதல் தடுத்து நிறுத்தப் பட்டிருக்காவிடில் துறைமுகத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டிருக்குமெனவும் தெரிக்கப்படுகிறது. சி

# கல்லடி முகாமில் இராணுவ பயிற்சி

(மட்டக்களப்பு)

இராணுவத்திற்கு புதிதாக சேர்க்கப்படும் சிங்கள இளைஞர்களுக்கு கல்லடி இராணுவ முகாமில் வைத்து பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் ஓர் அம்சமாக தினமும் காலை, மாலை வேளைகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் இம் முகாமிற்குள் கேட்டவண்ணம் உள்ளதாகவும் இப் பகுதி வாழ் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாம மேலும் விஸ்தரிக்கப் படுவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பலநிரந்தரக்கட்டிடங்கள் இங்கு அமைக்கப்பட உள்ளதாகவும் நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. க-சி

# யாழ். குடா தாக்குதல் குறித்த

## இரகசிய திட்டம் புலிகளுக்கு கிடைத்தது?

[கொழும்பு]

யாழ். குடாநாடு மீதான தாக்குதல் பற்றிய இரகசிய திட்டம் புலிகளுக்கு கிடைத்துள்ளதாகவும் இது எப்படி அவர்களுக்கு கிடைத்தது என்பது பற்றியும் இராணுவத்தலைமைப் பீடத்திற்கு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாம்.

தாக்குதல் திட்டம் புலிகளுக்கு கிடைத்ததால் படையினர் நடவடிக்கையில் பாரிய பின்னடைவு ஏற்படும் நிலைதோன்றியுள்ளதாம்.

தாக்குதல் திட்டம் வெளியானது குறித்து தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்ற போதும் இதுவரை பயன் ஏதும் கிடைக்கவில்லையாம்.

இதேவேளை யாழ் குடாவில் மேற்கொள்ளப்படும் பாரிய தாக்குதலால் பொது மக்களுக்கு பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும் என்பதால் இது குறித்து முன் எச்சரிக்கைகளை மேற்கொள்ளுமாறு படையினர் கோரப்பட்டுள்ளனராம். சி

# அரச ஊழியர்க்கு சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்க்கு விரைவில் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் ரத்ன சிறி விக்கிரம நாயக்கா தெரிவித்துள்ளார்.

அரச ஊழியரின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை சம்பள சபையிடம் விடுத்துள்ளேன்.

எனவே பொ.ச.மு ஆட்சியில் அரச ஊழியர்க்கு விரைவில் நல்ல எதிர்காலம் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். சி

# தனியார் விமான நிறுவனத்தில் புலிகளின் ஆதரவாளருக்கு பயிற்சி

(கொழும்பு)

தனியார் விமான நிறுவனம் ஒன்று விடுதலைப் புலிகளிற்கு நெருங்கியவர்களுக்கும் விமானம் ஓட்டும் பயிற்சி வழங்கியிருப்பதாக சில அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

அமைச்சரவைக் கூட்டத்திலே இவர்கள் தெரிவித்த மேற்படி தகவல் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விமான விபத்து குறித்து கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கூடிய அமைச்சரவை தீவிரமாக ஆராய்ந்துள்ளது. இதன் போது ஜனாதிபதி சந்திரிகா உள்ளூர் விமான சேவை அனைத்தையும் உடனடியாக நிறுத்துவது குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

அத்துடன் உல்லாசப் பயணிகளில் எவ்வளவு பேர் உள்ளூர் விமான சேவையை பயன்படுத்துகிறார்கள் என உல்லாசப் பயணத்துறை அமைச்சரிடம் கேட்டார். இரண்டு சத வீதமான உல்லாசப் பயணிகளே இதனை பயன்படுத்துவதாக அவருக்கு தெரிவிக்கப்பட்டது. சி

# படை முகாமைச் சுற்றி

## 9 அடி உயர முட்கம்பி வேலி

(மட்டக்களப்பு)

மட்டு. காரைதீவ அதிரடிப் படை முகாமைச் சுற்றி 9 அடி உயரமான கம்பி வேலிகளும கம்பிச்சுருள்களும் புதிதாக அமைக்கப்பட்டு வருவதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில் பொலிஸ் நிலையங்களின் முன்பாக மண் மூடைகளும் அமைக்கப்பட்டு புதிய "சென்றிகள்" அமைக்கப்பட்டும் வருகின்றதாம்

இதேவேளையில் காரைதீவிலிருந்து மட்டக்களப்பிற்கு செல்லும் போது 6 சோதனைச் சாவடிகளிலும் பின்னர் காரைதீவிற்கு திரும்பும் போது 8 சோதனைச் சாவடிகளிலும் பயணிகள் வாகனங்களில் பொருள்கள் இறக்கப்பட்டு நுணுக்கமாக சோதனைக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அண்மைக்காலத்தில் அதிகமாகக் காணப்படுகின்றதாம். க-சி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—09—20**

புதன் இரவு

08-02 தியாகி லெப். கேணல் திலீபனின் 8ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - சோ. பிரேமினி எழுதிய "விண்மீனாய் நின்று நீ வெற்றிகளைக் கண்டிடுவாய்"<br>
08-20 வாத்திய கானங்கள்<br>
08-30 செய்திகள்<br>
08-40 நாடகம் - முதலாம்பிள்ளைஎழுதிய "வதந்திகள்"

**1995—09—21**

வியாழன் காலை

07-02 மாவீர வணக்கம்<br>
07-15 விடுதலை கீதங்கள்<br>
07-30 செய்திகள்<br>
07-35 பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து<br>
08-00 மணி வரை விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—09—20**

புதன் மாலை

05-01 சிந்தனைச்சிதறல்<br>
05-02 எழுச்சிகீதம்<br>
05-10 புதியவை<br>
05-15 படப் பாடல்கள்<br>
05 30 அறிவூற்று<br>
06-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்<br>
06-02 உங்கள் தெரிவு<br>
06-10 செய்திகள்<br>
06-15 விளையாட்டுச் செய்திகள்<br>
06-20 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# யாழ்.குடா தாக்குதலை தடுக்க புலிகள் பல்வேறு முயற்சிகளாம்

(கொழும்பு)

யாழ். குடாவில் இராணுவத்தினரின் பாரிய தாக்குதலை தடுக்க விடுதலைப் புலிகள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்களாம்.

கொழும்பில் அரசியல் தலைவர்களை கொல்லுதல், அங்கு குண்டு வெடிப்புகளை நடாத்துதல், கிழக்கில் படை முகாம்கள் மீதும், ரோந்து அணிகள் மீதும் பாரிய தாக்குதல்களை தொடுத்தல், படையினரின் வான் வழி, கடல் வழி போக்குவரத்துக்களை சீர்குலைத்தல் உட்பட பல நடவடிக்கைகளுக்கும் புலிகள் திட்டமிட்டுள்ளதாக படை வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்காக விசேட படையணிகளை புலிகள் அந்தந்தப் பகுதிகளுக்கு அனுப்பியுள்ளனராம். இதன் மூலம் அரசுத் தலைமை, இராணுவ கட்டமைப்பில் சீர்குலைவுகளை ஏற்படுத்தி யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதலை நிறுத்த புலிகள் முயற்சித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# கேளிக்கை விருந்தின் பின்பே ரவி விமானத்தை ஓட்டினார்

[கொழும்பு]

கடந்த வாரம் விபத்துக்குள்ளான ஏ. என். 32 என்ற அந்தப் புதிய விமானத்தை முதல் தடவையாக முழுப்பொறுப்பேற்று அன்று ஓட்டிவந்த ஸ்குவாட்ரன் லீடர் ரவி பாக்கியநாதன் விபத்து நடப்பதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன் கேளிக்கை விருந்தொன்றில் கலந்து கொண்டிருந்தார் என விமானத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் அன்ரனோவ் புதியவிமானத்தை ஓட்டுவதற்கு தலைமை விமானியாக பொறுப்பேற்றதற்கான சந்தோசத்தைக் கொண்டாடுவதற்காகவே விமானத்தை ஓட்டுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன் தன் சகாக்களுடன் கேளிக்கை விருந்தொன்றில் ரவி பாக்கியநாதன் கலந்து கொண்டார் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

அன்ரனோ விமானம் வீழ்ந்ததற்கு ரவி பாக்கியநாதனின் தனிப்பட்ட பிரச்சினைதான் காரணமாக இருக்குமோ எனவும் சந்தேகிக்கப்படுகின்றதாம். -ர-சி

### ஏழாயிரம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

காலத்திலேயே எமது தமிழீழத்தை வென்றெடுக்க நாம் அனைவரும் போராட்டத்தில் இணைய வேண்டும் என்றும் கூறினார். 160-ரி

### முன்னாள்

(3ம் பக்க தொடர்ச்சி)

விரிவான விளக்கத்தை பெற்றுள்ளது.

இதன் போது, விமானத்தின் உள்ளே, விமானத்தின் பின் புறப்பகுதியில் சிறிய தொரு குண்டு வெடித்தாலும் தொலைத் தொடர்பு கேபிளும் அன்ரனாவும் உடனடியாக செயலிழந்து விமானத்திற்கு விமான நிலைய கட்டுப்பாட்டு கோபுரத்திற்கு மிடையிலான தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டு விடுமென தெரிவித்துள்ளார்கள்.

மேலும் விமானம் வெடித்து சிதறும் வரைக்கும் அல்லது தரையிலோ, நீரிலோ வீழ்ந்து நொருங்கும் வரைக்கும் அதனுள் இருப்பவர்களுக்கே மிகுதி அனைத்தும் தெரியுமென கூறப்பட்டுள்ளது. சி

வேரோடிப் பயிர் வாழ<br>
விதைபோடு நீயாழ

## உள்ளூர் விமான சேவைகளுக்கு
# அரசு தடைவிதித்ததற்கு எதிராக சட்ட நடவடிக்கை எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூர் விமான சேவைகளுக்கு அரசு தடை விதித்ததற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக உள்ளூர் விமானப் போக்குவரத்துச் சேவைச் சங்கம் எச்சரித்துள்ளது.

அன்ரனேவ் விமானம் வீழ்ந்ததாலும், நாடாளுமன்றப் புலிகள் விமானம் மூலம் தாக்கப்போவதாகவும் கூறி, உள்ளூர் விமானச் சேவைகளுக்குத் தடை விதித்தமை கேலிக்குரிய ஒரு விடயம் என்றும் அவை கண்டனம் தெரிவித்துள்ளன.

இது குறித்து மேற்படி சங்கத்தின் தலைவர் திரு றேகான் நாணயக்கார போக்குவரத்து அமைச்சர் திரு. தர்மசிறி சேனநாயக்காவுக்கு ஆட்சேபனைக் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். உள்ளூர் விமானச் சேவைகளை நிறுத்துவது பற்றித் தங்களின் ஆலோசனைகள் எதுவும் பெறப்படவில்லை எனவும் கூறியுள்ளார்.

ஒவ்வொரு முறையும் இராணுவ விமானங்கள் பேராபத்துக்கு உள்ளாகும் போதெல்லாம், உள்ளூர் விமானச் சேவைகள் நிறுத்தப்படுவது வழமையான ஒரு விடயமாகி விட்டது எனவும் குற்றம் சாட்டியுள்ளார். சி-ரி

# அமைச்சரவையில் மாற்றம் எதுவுமில்லை

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றியமைக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்ற குழு கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றியமைக்கப்படவுள்ளதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திக்கு ஜனாதிபதி தெரிவிக்கையில் அப்படியான உத்தேசம் அரசுக்கு கிடையாது என திட்டவட்டமாக தெரிவித்தார். கே-ரி

# வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

புகையிரத தொழில் நுட்ப ஊழியர்களால் நடத்தப்பட்ட வேலை நிறுத்தம் நேற்றுமாலை கைவிடப்பட்டது.

அரசு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்யப்போவதாக கூறிய தொழிற்சங்க தலைவர்கள், நேற்று மாலை பொது நிர்வாக அமைச்சர் ரத்னசிறி விக்கிரநாயக்காவுடன் பேச்சு நடத்திய பின் வேலை நிறுத்தத்தை கைவிட இணங்கினர். கே-ரி

# அன்ரனேவ் விபத்து விசாரணை குறித்து ரத்வத்தைக்கு உடனுக்குடன் தகவல்

(கொழும்பு)

அன்ரனேவ் விமான விபத்துக் குறித்து தீவிரமாக நடைபெற்றுவரும் விசாரணைகளின் விபரங்கள், உடனுக்குடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தைக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி விசாரணைகள் குறித்துப் பொலிஸ் மா அதிபர் டபிள்யு ராஜகுரு, விமானப் படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க ஆகியோர் இந்த தகவல்களை அமைச்சர் ரத்வத்தைக்கு வழங்கி வருகின்றனர்.

விசாரணைகளில் ஏதாவது திருப்பம் ஏற்படின், இதுபற்றி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அறிவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாம்.

தற்போதைய விசாரணைகள் விபத்திற்கு என்னென்ன எல்லாம் காரணமாய் இருக்கலாமோ அவை பற்றி எல்லாம் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி-ரி

# புலிகளிடம் பீரங்கிகள் இருப்பது படையினருக்கு அச்சுறுத்தல்!

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டின் மீதான பாரிய தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளிடம் நீண்ட தூரப் பிரங்கிகள் இருப்பது, படையினருக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளது இராணுவ பலம் ஒருபடி மேலும் உயரவும், பிரதான படைமுகாம்களுக்குள் அச்சுறுத்தலை ஏற்படுத்தவும் பீரங்கித் தாக்குதல் கைகொடுக்கும் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஆனால் புலிகளிடம் பீரங்கிகள் இருக்கின்றதா அல்லது படையினரது பாதுகாப்பை ஊடுருவிச் சென்று வழக்கமான மோட்டார் ஷெல் தாக்குதலை நடத்திவிட்டுத் திரும்பி இருக்கிறார்களா? என்பதை இதுவரை உறுதிசெய்யஇயலவில்லை அதனை உறுதிசெய்ய மற்றொரு தாக்குதலுக்குக் காத்திருக்கவேண்டும் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. ரி

## ★ விடுதலைப் புலிகள்
# விமான எதிர்ப்பு ஏவுகணையை திருமலைக்கு நகர்த்தியுள்ளனர்?

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் திருகோணமலைக்குத் தமது விமான எதிர்ப்பு ஏவுகணையை கொண்டுவந்துள்ளதாக புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் பெருமளவு ஏவுகணைகளை மாட்டு வண்டிகள் மூலம் திருகோணமலைக்கு காடுகளினூடாக கடத்தி வந்துள்ளார்களாம்.

திருமலை சீனன் குடா விமானத் தளத்திற்கு வந்து செல்லும் விமானங்களுக்கு இதனால் பெரும் ஆபத்து ஏற்படலாமெனவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே போன்ற ஆபத்து மட்டக்களப்பு மாவட்டத்திலும் விமானங்களுக்கு ஏற்படலாமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சி-ரி

## ஏறாவூரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை நடத்தினர்.

செங்கல் ஏற்றப்பட்ட லொறி ஒன்றில் வந்தே விடுதலைப் புலிகள் இந்த தாக்குதலை மேற்கொண்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. -ரி

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த
'வேரும் விழுதுகளும்'
கல்வியியற் கண்காட்சி
இடம்: நுணுவில் கண்ணகை அம்மன் கோவிலடி
நிகழ்வு நேரம்: காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகிறது
உள் அனுமதிக்கப்படும் இறுதி நேரம் மாலை 5-30 மணி
எங்களைத் தேடி... செல்வோமா?
செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்
(ஏ-5259)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.

## கிரிக்கெட்:
# இலங்கை வெற்றி

(இஸ்லாமாபாத்)

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பைசலாபாத்தில் நடைபெற்ற 2வது கிரிக்கெட் டெஸ்டில், இலங்கை அணி 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஸ்கோர் விபரம் இலங்கை: 223, 361; பாகிஸ்தான் 333 209;

இந்தப் போட்டியின் சிறந்த ஆட்டக்காரராக மு. முரளிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சி-ரி

## 24 உதவி

(1ம் பக்க தொடர்ச்சி)

புனர்நிர்மாணம் செய்யும் வகையிலேயே இந்த மாற்றத்தை புதிய பொலிஸ் மா அதிபர் ராஜகுரு மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நிலையத்தில் 5 வருடங்களுக்கு மேற்பட பணியாற்றியவர்களே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளதாகவும் இந்த மாற்றத்தால் அரசியல் தலையீடும் மேற்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (கே-ரி)

## காங்கேசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிப்பதாகவும் இதனால் துறைமுகத்தினதும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளினதும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை அழிப்பதன் மூலம் படையினரின் சகல கடல் வழி விநியோகங்களையும் தடுக்கும் முயற்சியில் புலிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனராம். இதன் ஒரு கட்டமாக கடந்த வாரம் விடுதலைப் புலிகள் காங்கேசன் துறைமுகத்தை தாக்க முற்பட்டபோது அது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி-ரி

## படையினருக்கு
# ஐந்து மாதத்தில் 12 கலங்கள் இழப்பு

(கொழும்பு)

இலங்கைப் படையினர் கடந்த ஐந்து மாதத்தில் 12 விமான, கடற்படை கலங்களை இழந்துள்ளனர். இவற்றின் பெறுமதி பல கோடி ரூபாக்களாகுமென தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் 19ம் திகதி முதல் இதுவரை இரு பீரங்கி படகுகள், இரு அவ்ரோக்கள், ஒரு புக்காரா, மூன்று டோரா படகுகள், ஒரு கட்டளைக் கப்பல் (எடித்தாரா) மற்றும் அன்ரனேவ் 32 பி விமானம் இரு பெல் ஹெலிகொப்டர்களை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இந்த சிறிய நாடு மிகப்பெரும் இழப்புகளைச் சந்தித்துள்ளது. இந்த இழப்புகள் நாட்டை பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளுவதுடன் இதை ஈடுகட்ட அரசு பொதுமக்கள் மீது அதிகளவு வரிகளை சுமத்தி துன்புறுத்தும் நிலை ஏற்படுமென அரசியல்வாதி ஒருவர் கூறியுள்ளார். -ரி

## வடபகுதி

(1ம் பக்க தொடர்ச்சி)

வடபகுதியில் பாரிய தாக்குதலை மேற்கொள்வதற்குப் படையினரைக் கொண்டுவந்து குவித்திருந்தபோதிலும், பல சிக்கல்கள், தடைகள் ஏற்பட்டுத் தாக்குதல் தாமதமாகி உள்ளதுடன், படை நடவடிக்கைக்கு உகந்ததல்லாத மாரி காலம் அண்மித்துவிட்டதாலும், குறிப்பிட்ட தாக்குதலில் தளம்பல்நிலை காணப்படுகின்றது.

ஏற்கனவே வகுக்கப்பட்ட ஓர் இராணுவ சட்டவரையன்படியே, வடக்கில் சிறுசிறு அளவிலான தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

போர் முனையில் கடுமையான எதிர்த் தாக்குதல்களைத் தொடுத்துச் சமர் புரியும் புலிகள், வடபகுதியில் படை முகாம்களுக்குரிய கடல் மற்றும் வான் வழி மார்க்கமான அரச படைகளின் விநியோகச் செயற்பாடுகளை முறியடிப்திலும் முனைப்போடு செயற்பட்டு வருகின்றார்கள்.

ஐரிஸ் மோனா கப்பல் கடத்தலின்போது இரு சுப்பர் டோரா படகுகளை தாக்கி அழித்தமை, புல்மோட்டை கடற்பரப்பில் இன்னொரு டோரா படகு மீது தாக்குதல் தொடுத்தமை காங்கேசன் துறைமுகத்தில் ஊடுருவி தரையிறக்கும் கப்பல் மீது மேற்கொண்ட தாக்குதல் பலாலி இராணுவ முகாம் மீதான ஷெல் தாக்குதல் போன்ற விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளினால் வடபகுதி மீதான பாரிய இராணுவ தாக்குதலிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பலாலி நோக்கி 75 படையினருடன் புறப்பட்ட அன்ரனேவ் விமானம் நடுவானில் வெடித்துச்சிதறி அதில் வந்த படையினர் அனைவரும் உயிரிழந்ததும் வடபகுதி மீதான தாக்குதலை பின்னடையச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. -ரி

## யுத்தம்

(1ம் பக்க தொடர்ச்சி)

முடிவுக்கு கொண்டு வருபவர்களாகக் காணப்படவில்லை.

தலைநகரில் அழகிய பூஞ்சோலையாக அமைந்திருந்த அலரி மாளிகை தற்போது ஒரு போர்க்கால தளபதியின் இல்லம் போன்று மண்மூடை அரண்கள் நெடிதுயர்ந்த மதில் சுவர்களுடன் காணப்படுகின்றது. ரி-

## திலீபன்

(1ம் பக்க தொடர்ச்சி)

வேறுபாடின்றி அதிகளவில் கலந்துகொண்டனர்.

தியாகி திலீபனின் உருவப் படத்துக்கு பொதுமக்கள் தினமும் காலையில் சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து சிரமதான மூலம் பாடசாலை வளவுகளைத் துப்பரவு செய்து வருகிறார்கள். சனசமூக நிலைய உறுப்பினர்களும் தமது பகுதிகளில் பொது இடங்களை, மைதானங்களை சிரமதான மூலம் துப்பரவு செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர்.

நல்லூரில் உள்ள உண்ணாவிரதப் பந்தலில் நேற்று ஆண்கள், பெண்கள், மாணவர்களென பலர் பெருமளவில் உண்ணாவிரதம் இருந்தார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், இசைப்பிரசங்கங்கள், தியாகி திலீபன் பற்றிய சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

162- 170- ரி